**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI</u>**

O.S No. 77 of 2020

Deposition of P.W.1

Name of the Witness: திரு.கணேசன்

Date : 06.11.2025

***<u>10ம் பிரதிவாதி தரப்பில் மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>***

*வழக்கு தாக்கல் செய்யும் போது நான் 10ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு 01.03.2022ல் தள்ளுபடியானது என்றால் சரிதான். 05.04.2022 அன்று ராஜாமணி, கார்த்திகேயன், விஜய்ஆனந்தன் 10ம் பிரதிவாதி மகேந்திரனுக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதன் சான்றிட்ட நகலை நான் தாக்கல் செய்துள்ளேன். பிறகு 10ம் பிரதிவாதி இந்த வழக்கில் தேவையான தரப்பினர் என்பதால் அவரையும் இந்த வழக்கில் சேர்த்தேன். பட்டா கொடுப்பதற்காக சொத்தை அளக்கும் போது தான் அந்த பத்திரம் பற்றி தெரியவந்தது. கிரைய பத்திரம் சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். ஆனால் காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்டது, ஆனால் ராஜாமணி பஞ்சாயத்தில் பேசிய படி நடக்கவில்லை. 1, 3, 4 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து சொந்தம் என்பதால் தான் 10ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 10ம் பிரதிவாதியை இந்த*

வழக்கில் சேர்த்தது தவறு என்றாலும் அவருக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.